செய்தி வெளியீடு: 540 நாள்: 27.8.2009

**10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவிகளுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.**

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (27.8.2009) தலைமைச் செயலகத்தில், 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகளை வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

இத்திட்டத்தின்படி, 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெறுகின்ற பிற்படுத்தப்பட்ட மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 2009–10ஆம் ஆண்டில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த 70 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 4 இலட்சத்து 12 ஆயிரம் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைச் செயலாளர் திரு. து.நா. ராமநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் திரு. குமார் ஜெயந்த், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் திரு. ப. அண்ணாமலை ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.